අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/4/58/16/08/03/ (VOL - 111)    ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. }    දිනය / திகதி / Date } 2023.09.

மாகாண கல்விப் பணிப்பாளர்

வலயக் கல்விப் பணிப்பாளர்

பீடாதிபதி

TRANSLATE COPY

**<u>இலங்கை கல்வியியலாளர் சேவை வருடாந்த இடமாற்றங்கள் - 2024</u>**

2023.07.10 ஆம் திகதி வெளியிடப்பட்ட அமைச்சின் 30/2023 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் இத்துடன் காணக்படுகின்ற ஆவணங்கள் (இணைப்பு-01)தொடர்பான இடமாற்றம் 2024.01.01 ஆம் திகதி முதல் செயலாகும் வகையில் அனுமதிக்கின்றேன் கல்வி அமைச்சின் www.moe.gov.lk எனும் வலைத்தளத்தில் வெளிடப்பட்டுள்ள இந்த இடமாற்ற கட்டளையின் படி இடமாற்றம் பெற்ற நீங்கள் நிறுவனத்தில் அனைத்து உத்தியோகத்தர்களும் அறியும் வகையில் குறிப்பிட்ட திகதியில் புதிய பணியிடத்தில் கடமைகளை பொறுப்பேற்கும்படி அறிவுறுத்தவும்.

02. இந்த உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2310/ 29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள நடைமுறை விதி (தொகுதி இலக்கம் 1) இன் XVIII ஆம் அத்தியாயத்தின் விதிமுறைகளுக்கு இணங்க தமது இடாற்ற கோரிக்கை தொடர்பாக வருடாந்த இடமாற்றக் குழுவின் கவனத்திற்கு உள்ளாகவில்லை என்றால் மட்டும் மேன்முறையீடுகளை முன்வைக்கலாம். மேன்முறையீட்டு விண்ணப்பப்படிவத்தின் மாதிரியொன்று (இணைப்பு 02) இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் அந்த படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட மேன்முறையீடு விண்ணப்பப்படிவங்களை 2023.04.21 ஆம் திகதிக்கு <u>எனக்கு</u> முன்னிலைப்படுத்தமாறு தயவுடன் அறியத்தருகின்றேன். இவ் இடமாற்ற ஆவணத்தின் ஸகான் பிரதி moesltes.branch@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும். இடமாற்ற ஆவணத்தில் உரிய உத்தியோகத்தரின் பெயருக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள தொடர் இலக்கத்தை மேன்முறையீட்டு விண்ணப்பத்தில் கட்டாயமாக குறிப்பிட வேண்டும் என்பதுடன், 2023.09.30 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் தொடர்பாக கவனிக்கப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

03. மேன்முறையீடுகள் முன்வைக்கப்படாவிட்டால் முறையாக சமகால சேவை நிலையத்தில் இருந்து விடுப்பு பெற்று இடமாற்றம் செயலாகும் 2023.08.02 ஆம் திகதி புதிய சேவை நிலையத்தில் கடமைகளை பொறுப்பேற்று தலைவர் மூலமாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் (இணைப்பு 03) பிரகாரம் கல்விச் சேவைகள் தாபன பிரிவிற்கு அறிவிக்கும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

04 தாங்கள் தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து /மாகாணத்திற்கு , வலயத்திற்கு உரிய ஆசிரியர் கல்லூரியிலிருந்து / ஆசிரிய மத்தியநிலையத்திலிருந்து வெளியே இடமாற்றம் பெறப்பட்ட உத்தியோகத்தர்கள், **<u>பதில் கடமையாளர் சமுகமளிக்கும் வரை பிற்போடாமல்</u>** உரிய திகதியில் புதிய சேவை இடத்தில் கடமையேற்க முடியுமாறு விடுவித்தல் செயற்பாடு மேற்கொள்ளுமாறு அறியத்தருகிறேன்.

05. மேலும், இடமாற்றம் பெற்று செல்வதற்கு முன் அலுவலரின் பொறுப்பில் உள்ள அரசுக்கு சொந்தமான கடித ஆவணங்கள் மற்றும் பொருட்களை தாபன தலைவரினால் பெயரிடும் அலுவலர் ஒருவருக்கு முறையாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி உரிய உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை வழங்குமாறு மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்.என் ரணசிங்க
செயலாளர்
கல்வி அமைச்சு

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 / +94112784825 / minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 / +94112785162 / secretary.education@moe.gov.lk